★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 65630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 25உ வியாழன் (9—8—56) ★ ★ வெளியூர்: ஆடி 26உ வெள்ளி (10—8—56) [இதழ் 50

## உலகில் 50,000 அணுகுண்டுகள்!

★

பெர்லின், ஆக. 7—

உலகில் 50,000 அணுகுண்டுகள் செய்து குவிக்கப்பட்டுள்ளனவாம்!

இந்தத் தகவலை, கிழக்கு ஜெர்மனியின் பிரபல விஞ்ஞானியான பேராசிரியர் மான்பிரெட்வான் ஆர்டென் என்பார் தெரிவித்திருப்பதாக, கிழக்கு ஜெர்மன் செய்தி நிறுவனம் ஒன்று கூறியிருக்கிறதாம்.

# டில்லியின் முரண்பட்ட கொள்கைகள்

## 80,000 மாணவர்கள் அர்த்தால்!

### இரு மொழி பம்பாய் அமைப்பை எதிர்த்து அகமதாபாத்தில் நடவடிக்கை

அகமதாபாத் நகரில் சுமார் 80 ஆயிரம் மாணவர்கள் பெரியதொரு அர்த்தால் நடத்தியிருக்கின்றனர்.

மூன்று நாட்களுக்கு இந்த வேலை நிறுத்தம் நடைபெறுமாம்.

இரு மொழி பம்பாய் மாநிலம் அமைப்பது என்ற டில்லியின் முடிவுக்கு எதிராகவே இந்த அர்த்தால் நடைபெறுகிறதாம்.

'மகா குசராத் அமைக்க வேண்டும்; இரு மொழி பம்பாய் மாநிலம் கூடாது' என்பன போன்ற கோஷங்களோடு மாணவர்கள் வீதிகளில் ஊர்வலம் வந்திருக்கின்றனர்.

நகரின் போக்கு-வரத்து நிலை நின்றுபோய்விட்டதாம்.

கடைகள் பலவும் இழுத்து மூடப்பட்டிருக்கின்றன.

பல்கலைக் கழக மாணவர்கள் பிரதிநிதிகள் மேற்கொண்ட முடிவுப்படியே இந்த அர்த்தால் ஆர்ப்பாட்டம் எல்லாம் நடைபெற்றுள்ளன என்று தெரியவருகிறது.

### 'ஒற்றுமை வளராது — மனக்கசப்பை ஏற்படுத்தும்'

புதுடில்லி, ஆக. 8—

"பம்பாயை இருமொழி மாநிலமாக்குவது குஜராத்தியர்—மகாராட்டிரர்களிடை ஒற்றுமையை வளர்ப்பதற்குப் பதில் மனக்கசப்பை ஏற்படுத்தும்" என்று இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழு வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறதாம்.

## ஆச்சாரியா வினோபா சூடு

### அம்பர் சர்க்காவிற்கும் ஆதரவு தந்துவிட்டு விசைத்தறி புகுத்தவும் திட்டமா?

### சர்க்கார் அமைத்த கதர் போர்டிற்கும் சர்க்காருக்கும் கருத்து வேறுபாடுகளா?

விசைத்தறியால் கைத்தறிகள் தூங்க நேரிடுமே!

புது, ஆக. 8—

பொருளாதாரம் மற்றும் துணித் துறைகளில் டில்லி சர்க்கார், அடிக்கடி ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகளைக் கடைப்பிடித்து வருவதாக ஆச்சாரியா வினோபா பாவே குற்றம் சாட்டியிருக்கிறார்.

"நம் சர்க்காரின் பொருளாதாரக் கொள்கை, இரு முகமாயிருக்கிறது.

"ஒருபுறம் இவர்கள் அம்பர் சர்க்காவை ஆதரிக்கிறார்கள்; அதே நேரத்தில், கைத்தறியாளர்கள் விசைத் தறிகளை உபயோகிக்க வேண்டுமென்கிறார்கள்; இது முரண்பட்ட சிந்தனையின் விளைவாகும்,"

என்று பாவே அவர்கள், பூதான் என்ற இதழில் எழுதியுள்ள புதிய ஜவுளிக்கொள்கை என்ற கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

"அம்பர் சர்க்காவை ஆதரிப்பதற்கான காரண விளக்கம் கூறுமாறு கேட்டால், சர்க்கார், 'அதிகப்படியானோருக்கு வேலை கிடைப்பதற்காகவே அம்பர் சர்க்காவை ஆதரிக்கிறோம்' என்று பதில் கூறுகிறார்கள். 'ஏன், விசைத்தறிகளை ஆதரிக்கிறீர்கள்?' என்று கேட்டால், 'நெசவாளர்கள், விசைத் தறியால் அதிகம் சம்பாதிக்க முடியும்' என்று கூறுகிறார்கள்.

"விசைத்தறிகள் புகுத்தப்பட்டு நிதி உதவி செய்யப்படுமானால், சாதாரண கைத்தறிகளில் ஆறு தறிகளில் ஒன்று மட்டுமே வேலை பெறும்; இதரவை தூங்கும். ஏன்தான் சர்க்கார் இப்படி இரண்டுபட எண்ணுகிறார்களோ? ஏன்தான் அவர்களின் கொள்கைகள், முரண்பட்டு நிற்கின்றனவோ?

"சர்க்காரின் புதிய துணிக் கொள்கையை எதிர்த்து, அகில இந்திய கதர் போர்டு தலைவர் பகிரங்கமாகவே குரல் கொடுத்திருக்கிறார். இந்த கதர் போர்டினை உருவாக்கியதே சர்க்கார்தான்; ஆனால் சர்க்காருக்கும்—போர்டுக்குமே பலத்த கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

"சர்க்கார் குழம்பிப்போய்க் கிடக்கிறது. பின் நமது கடமை என்ன? நாட்டில் உள்ள தறியாளர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு, ஒரே குரல் எழுப்புவதுதான் பலன் தரக்கூடியதாகும்.

"மற்றொருவழியும் உண்டு; அதுதான் தறியாளர்களும் விவசாயிகளும் ஒன்றுபட்டு ஒத்துழைப்பது. அதே நேரத்தில், தறியாளர் நிலையும் உயர்ந்தாக வேண்டும். இதற்கு வழி, விவசாயிகளும்—தறியாளர்களும் தாங்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற எண்ணத்தோடு ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்,"

என்றெல்லாம், பாவே உபதேசித்திருக்கிறார், அந்தக் கட்டுரையில்!

# இருமொழி பம்பாய் அமைப்பிற்கு எதிராகப் பலத்த ஆர்ப்பாட்டங்கள்

## போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பலர் பலி

### மாணவர்கள் காங்கிரஸ் மாளிகையை முற்றுகையிட்டனராம்

ஆமதாபாத், ஆக. 8—

இருமொழி பம்பாய் மாநில அமைப்பை எதிர்த்து இங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருப்பதின் விளைவாக ஏழு பேர் வரை உயிரிழந்தனர் என்றும், நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர் என்றும் தெரியவருகிறது.

போலீசார் மூன்று முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அதற்கு முன்பாகக் கண்ணீர்ப்புகைப் பிரயோகம், தடியடி முதலியனவும் நடைபெற்றிருக்கின்றன.

சுமார் ஐயாயிரம் பேர் கொண்ட கூட்டம்—பெரும்பாலானோர் மாணவர்கள் இன்று நகரில் உள்ள காங்கிரஸ் மாளிகையை முற்றுகையிட்டனராம். அப்போது முதன் முறையாக போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

பின்னர் மாலையில், பி. சோ.-க்கள் நடத்தப் போவதாக அறிவித்திருந்த பொதுக்கூட்டத்தைக் கலைக்கவும் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

## ஆந்திரா-சென்னை எல்லைத் தகராறு

### குழுவின் தீர்ப்பிற்கு விடுவது பற்றி காமராசர்

சென்னை, ஆக. 8—

"ஆந்திரா—சென்னை எல்லைத் தகராறினை ஒரு 'கமிஷன்' தீர்ப்புக்கு விடவேண்டுமா என்பதை பின்னர்தான் முடிவு செய்யவேண்டும்; ஏனெனில், ஆந்திர சர்க்கார், ஆந்திராவுக்கும்—ஒரிசாவிற்கும் இதர மாநிலங்களுக்கும் இடையேயுள்ள எல்லைத் தகராறுகளையும் இப்போது கிளப்பியிருப்பதால்தான்,"

என்று முதன் மந்திரி காமராசர் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

## தமிழ் சீக்கிரமே ஆட்சி மொழியாக்கப்படும்

### சட்டசபைக் கூட்டுக் கூட்டத்தில் சென்னை கவர்னர் உரை

சென்னை, ஆக. 8—

இந்திய அரசியல் சட்ட 345-வது பிரிவுப்படி புதிதாக அமையும் சென்னை மாநிலத்தில் விரைவில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்குவதே சர்க்காரின் நோக்கம் என்று, கவர்னர் பிரகாசா, சட்டசபைகளின் கூட்டுக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"நடைபெற்றுக் கொண்டிருக்கும் புது அமைப்பு வேலைகள், இந்த மாநிலம் ஒரு மொழிப் பிரதேசமாக அமைய வழி செய்கிறது; என்றாலும், புது அமைப்பிற்குப் பிறகும் இந்த மாநிலத்தில் தமிழ் அல்லாத பிறமொழி பேசுவோரும் இருப்பார்கள் என்பதால், அவர்களுடைய நியாயமான உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது சர்க்காரின் கடமையாகும்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சில பகுதிகள் சென்னையிலிருந்து மாற்றப்படுவதை ஒட்டி, அந்தப் பகுதிகளில் பணிபுரியும் சர்க்கார் ஊழியர்களின் நிலை குறித்து கவலைதோன்றியுள்ளதைக் குறிப்பிட்டு, மாநில புது அமைப்பு மசோதாவில் கண்டுள்ளபடி சிறுபான்மையினருக்கு எல்லாப் பாதுகாப்புகளும் தரப்படும்" என்றும் கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார்.

கவர்னர் மேற்கு வங்க மாநில கவர்னரின் மறைவைக் குறிப்பிட்டு விட்டு, அவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் எல்லோரும் எழுந்து நின்று ஒரு நிமிட நேரம் மௌனம் கடைப்பிடிக்கக் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து பேசிய கவர்னர், நெய்வேலியில் நடைபெற்ற நீர் இறைப்புப் பரிசோதனைகள் முழு வெற்றியளித்துள்ளனவென்றும் கூறினார்.

அவரது உரையில், புயல் நிவாரணம், விலைவாசி ஏற்றம், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள், கிராமக் கடன் வசதிகள், நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறு தொழில் வளர்ச்சி, கல்வி முதலிய அம்சங்கள் இடம் பெற்றிருந்தன.

## நாசர் மாஸ்கோ செல்வார்?

மாஸ்கோ, ஆக. 8—

சூயஸ் பிரச்சினை பற்றி இலண்டனில் மாநாடு நடைபெறவிருக்கும் 16-ந் தேதியன்று, எகிப்தியத் தலைவர் நாசர், மாஸ்கோ வந்து சேருவாரென மாஸ்கோவிலுள்ள எகிப்திய வட்டாரங்கள் கூறுவதாகச் செய்தி ஒன்று வெளிவந்துள்ளது.

## கொலம்பியாவில் வெடி விபத்து

### 1,200 பேர் பலி; 1000 பேர் படுகாயமுற்றனர்

வெடி மருந்துகள் ஏற்றிச் சென்ற எட்டு லாரிகள் வெடித்ததின் விளைவு—சதி காரணமா?

போகோதா, ஆக. 8—

காலி எனும் நகரில் வெடி மருந்துகள் ஏற்றிச்சென்ற எட்டு லாரிகள் வெடித்ததின் விளைவாக சுமார் 1,200 பேர்வரை கொல்லப்பட்டதாகவும், 1000 பேர்வரை காயமுற்றதாகவும் கொலம்பியாவின் செய்திப் பத்திரிகைகள் தகவல் தந்திருக்கின்றனவாம்.

இதற்காக சர்க்கார் நாடு முழுவதும் மூன்று நாட்களுக்கு துக்கம் கொண்டாடுமாறு உத்தரவிட்டுள்ளனராம்.

இந்த வெடி விபத்து, அரசியல் காரணங்களுக்காகத், திட்டமிட்டுச் செய்யப்பட்ட சதியின் விளைவு என்று கருதப்படுகிறதாம்.

நம் நாடு

சென்னை 9—8—'56 வியாழன்

# பயன்படாத நடைமுறை!

எகிப்து குடியரசுத் தலைவர் நாசிர், சூயஸ் கால்வாய் நிறுவனத்தைத் தேசியமயமாக்கி விட்டார்.

அந்த நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்துவிடப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

சூயஸ் கால்வாயில் கப்பல் போக்குவரத்துக்கு உலக நாடுகள் அனைத்துக்கும் எப்பொழுதும்போல் உரிமை உண்டு எனவும் அவர் உறுதி கூறியிருக்கிறார்.

அவ்வுரிமையில் நாட்டுக்கு நாடு எகிப்து பாரபட்சம் காட்டாது எனவும் அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சூயஸ் கால்வாய் கப்பல் போக்குவரத்துமூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தைக் கொண்டு அசுவான் பேரணையைக் கட்டி முடிக்கப் போவதாக நாசிர் அறிவித்திருக்கிறார்.

சூயஸ் கால்வாய், எகிப்து ஆட்சி உரிமைக்கு உட்பட்ட ஒன்றேயாகும்.

இழந்த ஒரு உரிமையை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ள ஒரு நாடு முன்வருவதைத் தவறு எனக் கொள்வதற்கு எவருக்கும் உரிமை கிடையாது.

இக்கருத்தில் பிரிட்டனுக்கும் முரண்பாடான கருத்து இருப்பதாகக் கூறுவதற்கில்லை.

சூயஸ் கால்வாயை தேசியமயமாக்க மேற்கொண்டமுறையினை, குறிப்பிட்ட காலத்தைத்தான் பிரிட்டன் ஏற்க மறுக்கிறது.

சூயஸ் கால்வாயில் கிடைக்கப்பெறும் வருமானத்தைக் கொண்டு அசுவான் அணையைக் கட்டுவது இயலுமா? கால்வாய் நிறுவனப் பங்குதாரர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதும் முடியுமா?—என்பதில் உலக வட்டாரங்கள் சில ஐயம் தெரிவிக்கின்றன. இவ்விரண்டு வினைக்களும் விவாதத்திற்குரியன மட்டுமல்ல—சிந்தனைக்கும் உரியதுதான்.

காலம் மாறிவிட்டது. மத்தியக் கிழக்குப் பகுதியில், பிரிட்டனின் அச்சுறுத்தலுக்கும் அரசியல் சதிகளுக்கும் அராபிய நாடுகள் ஆட்பட்டுக் கிடந்த காலம் மலையேறிவிட்டது.

வேகமாக மாறிவரும் காலத்திற்கு ஏற்ப தன்னைப் பக்குவப்படுத்திக்கொள்ள பிரிட்டன் முனையவேண்டும். அந்த முனைப்பில்தான் பிரிட்டனின் புத்திசாலித்தனமும் எதிர்கால ஆக்கமும் அமைந்து இருக்கிறது.

அராபிய நாடுகளில் இன்று உருவாகி வளர்ந்துவரும் அரசியல் விழிப்புணர்வு, பிரிட்டனின் சென்றகால நடைமுறைகளின் உருபலனேயாகும் என்பதை வரலாறு வலியுறுத்துகிறது.

அதே நடைமுறையை மேற்கொண்டு அப்பகுதிகளில் உருவாகி வளர்ந்துள்ள தேசிய உணர்வை ஒடுக்கிவிட முடியும்—கட்டுப்படுத்திவிட முடியும் என பிரிட்டன் எதிர்பார்ப்பது விபரீத விளைவையே உண்டாக்கும்; பிரிட்டன்மீது அப்பகுதியில் இருந்துவரும் எஞ்சிய குறைந்த அளவு நட்புறவுக்கும் இறுதியில் பெருந் தீங்காக முடிவுறும்.

தனது அதிகாரத்திற்குட்பட்ட ஒரு செயலை, அதாவது சூயஸ் கால்வாயைத் தேசியமயமாக்கிவிட்ட நாசிரின் விடுதலை நிகழ்ச்சியை மாற்றி அமைக்க, பிரிட்டனுக்கு இருந்துவரும் நியாயமான ஒரே ஒரு வழி, எகிப்தை நட்பு முறையில் அணுகிப் பேசி முடிவு காண்பதேயாகும். அச்சிறந்த முறையைப் பின்பற்ற மறுத்துப் படை திரட்டுவதும், போர்க் கப்பல்களை எகிப்து கடலோரத்தில் கொண்டுவந்து நிறுத்துவதும், அம்மிரட்டலுக்கு ஏதேதோ பொருந்தாக் காரணங்களைக் கூற முற்படுவதும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவோடு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்ட நாச முறை என்பதை பிரிட்டன் உணர்ந்துகொள்ளாது இருப்பது அல்லது உணர்ந்து கொள்ளாதது போன்று நடிப்பது, விந்தையிலும் விந்தையாகும்.

உலகத்து மக்களை நாகரிகமாக்குவது, அதற்குரிய பயிற்சியை அம்மக்களுக்கு அளிப்பது ஆகிய 'நற்பணி'தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் 'உள்ளடக்கம்' என்ற வாதம், இந்த நூற்றாண்டின் துவக்கத்திலேயே சுக்கு நூறாக்கப்பட்டு விட்டது என்பதை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

பிரிட்டன் மேற்கொண்டுள்ள போர் முன்னேற்பாடு சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கப்பட்டதால் மட்டுமே ஏற்பட்டுவிட்ட அச்சத்தின் விளைவு அளவுடன் கட்டுப்பட்டு விடக்கூடியதல்ல. அதன் அச்சத்திற்கும் ஆத்திரத்திற்கும், அதனால் எதிர்பார்க்கப்படும் வேறு காரணங்களும் இல்லாமல் இல்லை.

எகிப்து குடியரசுத் தலைவர் நாசிரின் செயலை முன்மாதிரியாகக் கொண்டு, அராபிய நாடுகளும், பாரசீகத்தில் முதியவர் முசாதிக் செய்தது போன்று தம்தம் பகுதியில் உள்ள எண்ணெய் நிறுவனங்களை தேசியமயமாக்கத் துணிந்து விட்டால் என்ன செய்வது என்ற எண்ணமே, பிரிட்டனுக்குள்ள அச்சத்தை மேலும் கூடுதலாக்கி இருக்கிறது.

எகிப்தைப் பின்பற்றி தம்தம் பகுதியில் உள்ள எண்ணெய் நிறுவனங்களை தேசியமயமாக்க முன்வராது அராபிய நாடுகள் இருக்கவேண்டுமானால், அதை, பிரிட்டன் இப்பொழுது மேற்கொண்டது போன்று, போர்க் கப்பல்களை மத்தியதரைக் கடல் பகுதியில் கொண்டுவந்து குவிப்பதினால் சாதித்துக்கொள்ள ஒருக்காலும் முடியப்போவது கிடையாது. ஆனால், அதற்கு மாறாக, அராபிய நாடுகள், அச்செயலை உடனடியாக மேற்கொள்ளுவதற்கே பிரிட்டன் செய்கை துணைசெய்யக்கூடும் என்பதில் ஐயமில்லை.

அவ்வகையில் அராபிய நாடுகளிலிருந்து செய்தி கிடைக்குமானால், அதில் அதிர்ச்சி அடைவதற்கோ ஆச்சரியப்படுவதற்கோ ஒன்றுமில்லை.

எண்ணெய் நிறுவனங்கள் மூலம் கிடைக்கப்பெறும் வருவாய் தனக்கு இல்லாமல்போய் விடுமோ என பிரிட்டன் அஞ்சுவது போன்றே, அந்த எண்ணெய் மூலம் கிடைத்து வருகிற குறைந்த வருவாயையே தங்கள் பொருளாதார அஸ்திவாரமாகக் கொண்டிருக்கின்ற அராபிய நாடுகளும், அந்தக் குறைந்த வருமானத்திற்கும் கேடு நேராமல் பார்த்துக் கொள்ளுவதில் கருத்துச் செலுத்தாமல் இருக்காது.

எனவே, பிரிட்டன் தனது படை திரட்டும் சலசலப்பைக் கைவிட்டு, அறிவுடைமையை மேற்கொண்டு, சிக்கலுக்குப் பரிகாரம் தேட முன்வர வேண்டும் என்பதே நமதுகோரிக்கை.

படை திரட்டுவது, அதன் மூலம் அராபிய நாடுகளை அச்சுறுத்தி அடிபணியச் செய்யப் பார்ப்பது பயன்படாத நடைமுறை என்பதை பிரிட்டன் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே, அப்பயன்படாத நடைமுறையை பிரிட்டன் எவ்வளவு விரைவில் கைவிட்டுவிட முன்வருகிறதோ அந்த அளவில் பிரிட்டனுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குப் பரிகாரம் கிடைப்பதும் இருக்கிறது என்பதில் ஐயத்திற்கு இடமே கிடையாது.

## கொத்தலாவலையே பரவாயில்லையே!

1956-ம் ஆண்டு ஏப்ரல் திங்களுடன் முடிந்த கடந்த ஆறு திங்களில், இலங்கையில் குடி உரிமை கோரி மனுச் செய்து கொண்ட 83,248 இந்திய வம்சாவழியினரின் 25,565 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

'இது கடைசியாகக் கிடைத்த விவரம்' என்று, வெளி விவகார இலாகா மந்திரியின் மக்கள்சபைச் செயலாளர் திருமதி இலட்சுமி மேனன் மாநிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

## காலம் கனியவில்லை?

"இப்போது கைத்தறித் துணிகளுக்குத் தரப்படுவதைப் போலவே நடப்பு ஆண்டிலும், 1957—58-ம் ஆண்டிலும் புகுத்தப்படவிருக்கும் 35,000 விசைத்தறிகள் மூலம் தயாரிக்கப்படும் துணிக்கும் உதவித் தொகை தரப்படுமா என்பதை நிர்ணயிக்கும் காலம் இன்னும் வரவில்லை,"

என்று, தொழில் வர்த்தக இலாகா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போது தெரிவித்திருக்கிறார்.

## 'அப்பீல்'கள் அதிகரித்து வருகிறதாம்!

### நீதிபதிகள் எண்ணிக்கையை அதிகரிக்க மசோதா

புதுடில்லி, ஆக. 6—

அரசியல் சட்டத்தின்கீழ் அப்பீல்கள் அதிகரித்து வருவதால் தற்போதுள்ள ஏழு நீதிபதிகள் போதவில்லை என்று இந்திய உயர் நீதிமன்ற நீதிபதி சாக்காருக்குத் தெரிவித்ததால், மேலும் மூன்று நீதிபதிகளை அதிகமாக நியமிக்கக் கோரும் மசோதா ஒன்றை இந்திய சர்க்கார் மக்கள்சபையில் கொண்டு வந்தனர்.

நீதிபதி அதிகரிக்கப்பட்ட பிறகு பிரதம நீதிபதி தவிர 10 நீதிபதிகள் இருப்பர்.

# சிந்திரி தொழிலாளருக்கு ரோக்கப் பட்டுவாடா

## ரூ. 16 இலட்சம் வரை தரப்படுகிறது

### தினக் கூலித் தொழிலாளருக்கும் அடிப்படைச் சம்பள உயர்வு கிடைக்கிறது

புதுடில்லி, ஆக. 7—

சிந்திரி உர உற்பத்தித் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரொக்கமாகத் தரவும், இதர வசதிகள் செய்து தருவதற்காகவுமாக ரூ. 16 இலட்சம் வரை டில்லி சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்களாம்.

'போனஸ்' வேண்டும் என்ற தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டு சர்க்கார் இந்த ஏற்பாட்டினைச் செய்திருக்கிறதாம்.

ரூ. 8 இலட்சம் ரொக்கமாகத் தரப்படுமாம்.

மாதம் ரூ. 250 வரை சம்பளம் வாங்குவோருக்கு இந்த ரொக்கம் கிடைக்குமாம்; இதனால் தொழிற்சாலையில் உள்ள 8,000 பேரில் 6,000 பேருக்கு இது பலன்தரும்.

மிகுதி ரூ. 8 இலட்சமும் 'தொழிலாளர்கள் நல நிதி' என்று சேகரித்து வைக்கப்பட்டு, அவர்களின் யோசனைகளோடு செலவிடப்படும் என்றும் தெரியவருகிறது.

கடந்த 1954 செப்டம்பர் முதல் தினக்கூலி பெறும் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறதாம்.

இதனால், சுமார் 3,500 தொழிலாளர்களுக்கு ரூ. 10 இலட்சம் வரை தரப்படவிருக்கிறதாம்.

தொழில் நுணுக்கமறியாத சாதாரண தொழிலாளருக்கு, தினக்கூலி ரூ. 2 என்பது இனி ரூ 2—8—0 ஆக உயர்த்தப்படுகிறதாம்.

## உணவு பொருள் விலை ஏற்றத்திற்குக் காரணம்!

புதுடில்லி, ஆக. 6—

"அபிவிருத்தித் திட்டங்களுக்காக சர்க்கார் பெரு முதலீடுகளைச் செய்திருப்பதை ஒட்டி நாட்டில் பணப் புழக்கம் அதிகரித்திருக்கிறது. இதனால், உணவுத் தேவையும் அதிகரித்திருக்கிறது. இதற்கிடையில், உணவுப் பொருள் விநியோகம் சற்று தடைப்பட்டது; இதுவும், வியாபாரிகள் பொருள்களை முடக்கி வைத்ததோடு சேர்த்து, உணவு விலை ஏற்றத்திற்குக் காரணமாயிற்று" என்று, மக்கள் சபையில் விவசாய மந்திரி தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

## அரிசி விலை ஏறுவது ஆண்டுதோறும் வழக்கமாம்!

### மத்திய மந்தியின் பதில்

புதுடில்லி ஆக. 7—

"நடப்பு ஆண்டில் 10 இலட்சம் டன் அரிசி அதிகமாக உற்பத்தி ஆகியிருந்தும், சென்னையிலும், மற்றும் நாட்டின் இதர பாகங்களிலும் அரிசி விலை அதிகரித்ததற்குக் காரணம் என்ன?" என்று கேட்டபோது, உணவு மந்திரி ஜெயின் மக்கள் சபையில், 'எந்த ஆண்டிலும் இந்த மாதங்களில் விலை அதிகரிப்பது வழக்கம்' என்று பதில் கூறினாராம்.

சென்னையில் அரிசி விலை ஜூன் வரை 14.2 சதவிகிதம் அதிகரித்தது என்றும், அதன் பிறகு மேலும் ஏறி வருவதாகவும் அவர் சாவதானமாகப் பதில் சொல்லியிருக்கிறார்.

இதையும் சொல்லிவிட்டு, கூடவே கொஞ்சமும் கூசாமல் விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

## வறுமை, தள்ளாமையால் பாதிக்கப்பட்டோருக்கு!

### 'பீகார் நலத்திட்ட நிதி'

'பீகார் நலத் திட்ட நிதி' என்ற பெயரில் ஒரு நிதியைத் தொடங்க பீகார் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

மாகாணத்தில் வறுமையுற்றோர், தள்ளாத வயதினர், இன்னல்களுக்காளானோர் இப்படிப்பட்டவர்களுக்குத் தகுதியுள்ள இடங்களில் உதவ இந்த நிதி பயன்படுத்தப்படும். அரசாங்கம், முதலில் இதற்கு ரூ 1-இலட்சம் அடிப்படை நிதியாக வழங்கும். மக்களிடமிருந்து பொருளாகவும், பணமாகவும் வாங்கப்படும் நன்கொடைகள், மானியங்கள், சந்தாக்கள் முதலியனவற்றைத் தனிப்பட்டோருக்கும், அறநிலையங்களுக்கும் அரசாங்கம் அளிக்கும்.

1955-56-ல் இந்தியாவிலிருந்து ரூ 10,72,00,000 மதிப்புள்ள 9,21,00,000 டன் மாங்கனீஸ் கனி ஏற்றுமதியாயிற்று.

எஞ்சினியரிங் கல்லூரிகளில்

## மேலும் 60 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர்

சென்னை, ஆக. 7—

சென்னை மாநிலத்தில் உள்ள எஞ்சினியரிங் கல்லூரிகளில் மேலும் 60 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம்; இவர்களையும் சேர்த்தால், பல்வேறு எஞ்சினியரிங் கல்லூரிகளில் 660 மாணவர்கள் படிப்பதற்கு வசதி ஏற்படுகிறது.

இரண்டாம் திட்டத்தின் கீழ் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏராளமான எஞ்சினீயர்கள் தேவை என்பதால இந்த வகுப்புகள் பெரிதாக்கப்படுகின்றன என்று நிதிமந்திரி தெரிவித்திருக்கிறார்.

சென்னை — கிண்டியிலும், கோவையிலும் உள்ள கல்லூரிகளில், மொத்தம் 60 பேர் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளப்படுவராம்.

சென்னை மாநிலத்தில் மொத்தம் 5 எஞ்சினியரிங் கல்லூரிகள் உண்டு.

## காணப்படாதது எவ்வளவோ?

"1955-ம் ஆண்டில் இந்திய இரயில்வேக்களில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்தவர்களில் கண்டுபிடிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 73,65,219," என்று, மக்கள்சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஆரணியாற்றில் ஒரு பாலம்

சென்னை, ஆக. 8—

செங்கற்பட்டு மாவட்டத்தில் திருப்பாலைவனம் சாலையில் மீஞ்சூர்—காட்டூர் இடையே ஆரணியாற்றில் ஒரு பாலம் கட்டுவதற்காக மத்திய சாலை அமைப்பு நிதியிலிருந்து செங்கற்பட்டு மாவட்டக் கழகத்திற்கு ரூ. 20 ஆயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

# கழகச் செய்திகள்

## வரட்டுப்பாரை எஸ்டேட்—வால்பாரை தி.மு.கழகம்

5—8—56 மாலை 5 மணியளவில், கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் திரு. செ. குருசாமி தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் செ. முத்துசாமி, அ. ப. செங்கோடன் ஆகியவர்கள் கழகக் கொள்கை—இலட்சியம் பற்றிப் பேசினர். பின்னர், கழக வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டது. தோழர் வம்புமுத்து சாமி அவர்கள் வரப்போகும் பொதுத் தேர்தல் பிரச்சாரம்—நிதி சேகரிப்புப் பற்றிப் பேசினர்.

## அம்மாபேட்டையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

5—8—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சேலம்—அம்மாபேட்டை தி. மு கிளைக் கழகச் சார்பில், எண் 2, மார்க்கெட் தெருவில், தோழர் கே. எஸ். கோவிந்தன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் கே. பி. நஞ்சப்பன், கே. எஸ். மணி, ஈ. ஆர். கிருஷ்ணன், சிற்றுளி-சுப்பிரமணியம், எஸ். எ. அன்புக்கரசு, எம். எஸ். இராமசாமி ஆகியோர் சர்க்கார் 'லைசென்சு முறையும் நெசவாளர் நிலையும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர்.

## கட்டிமேடு தி. மு. கழகம்

5—8—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, தோழர் ஜி. எஸ். மூர்த்தி இல்லத்தில், தோழர் எம். பீர்முகமது தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், வரும் செப்டம்பர் திங்களில் தி. மு கழக உதய நாளைக் கொண்டாடப் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதெனவும், கட்டிமேடு கழகக் கட்டிட நிதிக்காக ஓர் சிறப்புக் கூட்டம் நடத்துவதெனவும் 'அண்ணா வாசக மன்றம்' என்ற பெயரில் கழகத்திற்குச் சொந்தமாக ஒரு படிப்பகம் நிறுவுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## கடலூர் 2-வது வட்ட தி. மு. கழக இடமாற்றம்

கடலூர் ஓ. டி. பள்ளிவாசல் தெரு எண், 34 இல்லத்தில் இதுவரை இயங்கிவந்த 2-வது வட்ட தி. மு கழகம், 1—8—56 முதல் முத்து பண்டாரம் தெரு, எண் 2, கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

## பரமன்குறிச்சியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

5—8—56 இரவு 8 மணிக்கு, தி. மு கழகப் பொதுக்கூட்டம் கருணாநிதி திடலில், தோழர் கோவைராம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மணிமொழியன், எஸ். நடராசன் முதலானோர் 'தி. மு. கழகம் ஏன் தேர்தலில் ஈடுபடுகிறது?' என்பது பற்றியும், தென்னாடு பிரிய வேண்டியதின் அவசியம் பற்றியும் பேசினர்.

## புதுவை தி. மு. கழக வட்டக் குழு

5—8—56 காலை 10 மணிக்கு, புதுவை தி. மு கழகத்தில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற வட்டக் குழுக் கூட்டத்தில், 6—5—56ல் நடைபெற்ற மே விழாச் செலவுகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. அச்செலவில் பாதியைப் புதுவைக் கழகம் ஏற்றுக்கொள்வதென்றும், மற்றப் பாதியை ஏனைய கிளைகள் ஏற்றுக்கொள்வதென்றும் பொதுச் செயலாளர் கூறிய யோசனை ஒப்புக்கொள்ளப்பட்டது.

## புதுவை தி. மு. கழகம்

5—8—56 மாலை 7 மணிக்குப் புதுவை தி மு. கழகச் செயற்குழுக் கூட்டம், தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றபோது, 23—9—56-ல். புதுவை கழக 3-வது ஆண்டுத் துவக்க விழா, திராவிட நாடு பிரிவினை நாள் விழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

# செய்திச் சுருள்

★

## விருதுநகர் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

5—8—56 மாலை $3\frac{1}{4}$ மணிக்கு, இம்மன்றத்தின் 14-வது சொற்போர் அரங்கு, திரு. பாஸ்கர் தலைமையில் நடைபெற்றது. 'தமிழ் தனித்தியங்க முடியும்' என்ற பொருள் பற்றிய சொற்போரில் தோழர்கள் விவேகானந்தன், பால்துரைராசு, கணபதி, அமல கருணானந்தன், கோவிந்தராசன், சங்கரநாராயணன் ஆகியோர் பேசினர். தீர்மானம் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது.

## கோவை அழகிரி நினைவு படிப்பகம்

7—8—56ல் மேற்படி மன்ற சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் மு. இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. 'தொழிலாளர்கள்' என்ற தலைப்பில் தோழர்கள் அங்குதாசு, எம் கே சாமி, அசலம், கு. பா. சு மணி, கு ப. செ. நாதன், தேவராசு, சாமு-சுப்பிரமணியம், சின்னசாமி ஆகியோர் பேசினர்.

## சீரநாய்க்கன்பாளையம் வ. உ. சி. படிப்பகம்

2—8—56 காலை சீரநாய்க்கன்பாளையத்திலுள்ள இளைஞர்கள் அனைவரும் ஒன்றுகூடி, கிராம நலத்தை முன்னிட்டு, 'வ. உ. சி. படிப்பகம்' ஒன்று நிறுவி, படிப்பகத்திற்கான நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதியில் வந்திருந்த பொது மக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

## முதலூர் மறுமலர்ச்சி மன்றக் கூட்டம்

5—8—56 மாலை 6 மணியளவில், தோழர் நோ. நாகமணி தலைமையில் நடைபெற்ற மன்ற உறுப்பினர் கூட்டத்தில், இலங்கையிலிருந்து விரட்டப்படும் தமிழர்களுக்குச் சென்னை அரசாங்கமோ மத்திய அரசாங்கமோ ஏதாவது தொழிற்சாலைகள் அமைத்து வேலை கொடுத்து, தேவையான சலுகைகள் கொடுக்கவேண்டுமென்றும், அவர்கள் செய்யும் வியாபாரங்களுக்குச் சுமார் 5 ஆண்டுகளுக்காவது விற்பனை வரி ரத்து செய்ய வேண்டும் என்றும், இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு அங்குள்ள எல்லா உரிமைகளையும் அளிக்க இலங்கை சர்க்காரை வற்புறுத்துமாறும் இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், முதலூர் — சாத்தான்குளத்திற்கிடையே கருங்கல் ரோடு போடும்படி மாவட்டக் கழகத்தைக் கேட்டுக்கொண்டும், உணவுப் பண்டங்களின் விலை ஏறிவிட்டதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்யுமாறு சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சிறுகளப்பூர் த. நா. ஜிப்சம் சுரங்கத்தொழிலாளர் சங்கம்

6—8—56 இரவு 8 மணிக்கு, தோழர் இரா. பரமசிவம் தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கக் கிளைக் கூட்டத்தில் எம். வடிவேல் சுரங்கத் தொழில் பற்றியும், சுரங்கச் சட்ட விளக்கம் பற்றியும் பேசினர். தோழர் பி. முத்துகிருஷ்ணன், 'தொழிற் சங்கமும், தொழிலாளர் குறையும்' பற்றிப் பேசினர்.

# தேர்தல் நிதி அனுப்புவோர் கவனிக்க :

தி. மு. கழக தேர்தல் நிதிக்கு பணம் அனுப்பும் தோழர்கள், 'பொதுச்செயலாளர், தி. மு. கழகம், அறிவகம், இராயபுரம், சென்னை-13' என்ற முகவரிக்கே அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. க. தலைமை நிலையம்

# பம்பாய் பல்கலைக் கழகத்தின் புதிய திட்டம்

## எளிய வார்த்தைகளால் எளிய கருத்துக்கள் தொழிலாளருக்கு போதிக்கப்படும்

பம்பாய், ஆக. 7—

நகரத்தில் உள்ள தொழிற்சாலைகளிலும் சேரிகளிலும் கல்வி போதிப்பதற்கான திட்டம் ஒன்று, பம்பாய் பல்கலைக் கழகத்தாரிடமிருப்பதாகத் துணை வேந்தர் டாக்டர் ஜான் மத்தாய் தெரிவித்திருக்கிறார்.

"பொறுக்கி எடுக்கப்படும் ஆசிரியர்கள், தொழிற்சாலைகளுக்கும் சேரிகளுக்கும் சென்று எளிய வார்த்தைகளால், எளிய கருத்துக்களைப் போதிப்பர்.

"தொழிலாளருக்கு முதலில், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் பற்றிய விபரங்களும், உற்பத்தி முறையும், உற்பத்திப் பொருளுக்கு மார்க்கெட்தேடும் சிக்கலும் விளக்கிக் கூறப்படும். இதனால், தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலையில் ஆர்வம் பிறக்கமுடியும். படிப்படியாகத் தொழிற்சாலையின் சரிதமும் நாட்டின் சரிதமும் அவர்களுக்குப் போதிக்கப்படும். அப்போதுதான் தொழிலாளர்களிடை, வாழ்வைப்பற்றியும் அதன் பிரச்சினைகள் குறித்தும் ஒரு ஆக்கரீதியான கண்ணோட்டம் ஏற்பட முடியும்,"

என்று, திட்டம் குறித்து மத்தாய் விளக்கம் தந்திருக்கிறார்.

## உற்பத்தி துவங்குமாம்

பிலாயில் ரூ. 10 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் எஃகு உற்பத்தித் தொழிற்சாலை, வரும் 1959-ம் ஆண்டு முதலே—திட்டமிட்டதற்கு முன்பாகவே உற்பத்தி துவக்கிவிடும் என்று கூறப்பட்டிருக்கிறது.

# சைப்ரஸ் விடுதலை வீரர் மூவருக்குத் தூக்குத் தண்டனை

## மக்களில் எவருமே மோட்டார் கார் உபயோகிக்கக் கூடாதாம்

### வெள்ளையரின் ஏகாதிபத்திய வெறிப் போக்கு

நிகோசியா, ஆக. 7—

'விடுதலை விரும்பி'களுக்கு, தூக்குக் கயிறு மிகமிக மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டிய மலர் மாலை போன்றது என்பதை உணராத வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள், சைப்ரஸ் தீவின் சுதந்திரத்திற்காகப் போராடும் இளைஞர் பலரை தூக்கிலே தொங்கவிடுகிறது..

தாங்கள் பிணமாகப் போவோம் என்பது தெரிந்தும், விடுதலைக்காக வீறுகொண்டெழுந்துவிட்ட வீரர் கூட்டத்திற்குத் தூக்குக் கயிறுகள் அச்சத்தை மூட்டிவிட முடியாதே!

'கடந்த டிசம்பர் திங்களில், சைப்ரசில் ஒரு பிரிட்டிஷ் இராணுவத்தான் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்தார்கள் என்ற குற்றத்திற்காக இருவருக்கும், வேறு ஒரு குற்றத்திற்காக மற்றொரு இளைஞருக்கும் ஆக மூவருக்கும் இன்னும் 48 மணி நேரத்திற்குள் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுவிடும்' என்று கவர்னரான ஜான்ஹார்டிங் தெரிவித்திருக்கிறார்.

இதுவன்னியில், மற்றுமொரு விசித்திரமான தடையுத்தரவையும் பிறப்பித்திருக்கிறாராம், அந்தக் கவர்னர்!

'கிரோசியா பிரதேசத்தில், சைப்ரஸ் மக்களில் எவரும் மோட்டார்கார் உபயோகிக்கவேகூடாது' என்று ஒரு தடை விதிக்க அவர் உத்தேசித்திருக்கிறாராம்!

இந்தத் தடைகள் எல்லாம், சுதந்திரப் பாதையில் சைப்ரஸ் மக்கள் வீரநடை போடுவதைத் தடுத்து விடுமா என்ன ?

# அண்ணா

சுற்றுப்பயணம்

ஆக. 11 : வலங்கைமான்
12 : தேவகோட்டை
19 : காலை - பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20 : காலை-சேலம்
மாலை-குளத்தூர்

பொதுச்செயலாளர்

# இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஆக. 9 : ஆவணத்தான் கோட்டை
10 : அதிராம்பட்டினம்
11 : ஆலங்கோட்டை
12 : குடந்தை

# என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஆக. 12 : கடலூர்
15 : பண்ணைக்காடு
16 : சிவகிரி
18 : சின்னத்தம்பி பாளையம்
19 : காலை - பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20 : காலை-சேலம்

# இளந் தம்பதிகளான இரு கம்யூனிஸ்டு தமிழர்கள்!

## பிடித்துத்தருவோருக்கு பல்லாயிரம் ரூபாய் பரிசு தருவார்களாம்

### மலாயா சர்க்கார் போக்கு

ஈபோ (மலாயா), ஆக. 7—

இளந் தம்பதிகளான இரு தமிழர்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ கொண்டுவந்து தருவோருக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் பரிசு தருவதாக மலாயா சர்க்கார் அறிவித்திருக்கிறது; காரணம், அவர்கள் 'கம்யூனிஸ்டு பயங்கர'வாதிகள் என்பதுதானும்!

30 வயதான பெருமாள், 21 வயதான ருக்மணி என்ற பெருமாளின் மனைவி—இருவரும்தான் அந்தத் தமிழர்கள்!

பெருமாளை உயிருடன் பிடித்துத் தந்தால், 12,000 மலாயா டாலர்கள் (ரூ. 18 ஆயிரம்) பரிசும், பிணமாகத் தந்தால், 10,000 மலாயா டாலர் (ரூ. 12 ஆயிரம்) பரிசும் தரப்படுமாம்!

அதேபோல, ருக்மணியை உயிருடன் பிடித்துத் தந்தால் 2,000 மலாயா டாலரும், (ரூ. 3,000) பிணமாகத் தந்தால் 1,500 மலாயா டாலரும் (ரூ. 2,250) பரிசாகத் தரப்படுமாம்.

பெருமாள், மலாயா கம்யூனிஸ்டு கட்சியில் ஒரு மாவட்ட கமிட்டி உறுப்பினராம். இவரது தலைமையில், 'பயங்கர' இயக்கத்தின் ஒரு பகுதி இயங்குவதாகக் குற்றச்சாட்டு.

வடக்கு பெராக் பகுதியில் இயங்கும் 'பயங்கர இயக்க'த்தில் பணிபுரிவோரில் 31 பேர்களைப் பிடித்துத் தருவோருக்கு மலாயா சர்க்கார் பரிசுகள் தருவதாக அறிவித்திருக்கிறதாம். அந்த 31 பேர்களில் இந்த பெருமாளும்-ருக்மணியும் இருவராம்!

# 'தமிழ் நாடு எனப் பெயரிடுக'

## 'தேவிகுளம், பீர்மேடு வட்டங்களை கேரளத்துடன் இணைப்பது தமிழர்களுக்கு அநீதி இழைப்பதாகும்'

### மக்கள் சபையில் பூவராகசாமி வற்புறுத்தல்

டில்லி மக்கள் சபையில் மாநில புதுஅமைப்பு மசோதா விவாதிக்கப்பட்டபோது, தோழர் பூவராகசாமி அவர்கள், சென்னைக்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடவேண்டுமென வற்புறுத்தினர்.

"தேவிகுளம்–பீர்மேடு வட்டங்களை, தமிழ் நாட்டுடன் இணைக்காமல் கேரளத்துடன் இணைப்பது, அந்தப் பகுதியில் வாழும் தமிழர்களுக்கும் சேர்த்து இழைக்கப்படும் அநீதியாகும்"

என்றும் அவர் எடுத்துரைத்திருக்கிறார்.

தோழர் அனந்தன் நம்பியார் பேசும்போதும் சென்னைக்கு 'தமிழ் நாடு' எனப்பெயரிட வேண்டுமென வற்புறுத்தியிருக்கிறார்.

## ரூ. 5,78,000 செலவில்!

### புதுவையில் விசைத்தறி தொழிற்சாலை துவக்கும் ?

புதுவையில் ரூ. 2-இலட்சம் செலவில் 70 கைத்தறிகள் கொண்ட தொழிற்சாலை ஒன்றும், ரூ 5,78,000 செலவில் 100 தறிகள் கொண்ட விசைத்தறி தொழிற்சாலை ஒன்றும் ஆரம்பிக்க மத்திய சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

# சூயஸ் பற்றிய லண்டன் மாநாடு

## 'இந்தியா கலந்துகொள்ளும்' — பிரதமர் நேரு அறிவிப்பு

"சூயஸ் கால்வாயை எகிப்து தேசியமயமாக்கியதை ஒட்டி எழுந்துள்ள 'சிக்கலை' பரிசீலிப்பதற்காக மூன்று வல்லரசுகள் கூட்டுகிற இலண்டன் மாநாட்டில், இந்தியா கலந்துகொள்ளவிருக்கிறது,"

என்ற தகவலை இந்தியப் பிரதமர் நேரு மக்கள்சபையில் தெரிவித்திருக்கிருர்.

மேற்கு வல்லரசுகளின் முடிவினை எவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பதாலேயே இந்த மாநாட்டில் கலந்துகொள்ளச் சம்மதித்ததாக அவர் தெரிவித்திருக்கிருர்.

"இந்த மாநாடு எந்தவிதமான இறுதி முடிவையும் மேற்கொள்ள முடியாது; ஏனெனில், அந்த முடிவு எகிப்தின் சம்மதத்தைப் பெற்ருக வேண்டும்,"

என்றும், பிரதமர் நேரு தெரிவித்திருக்கிருர்.

"எகிப்தின் சுதந்திரம், அந்தஸ்து இவற்றிற்கு ஊறு தேடாத அடிப்படையில் சிக்கலுக்குப் பரிகாரம் காணுவதும், எந்தவிதமான யுத்த முஸ்தீபுகளையும் தவிர்ப்பதும் தான் இந்தியாவின் நோக்கமாகும்" என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

"இந்த மாநாட்டில் கலந்துகொள்வதின் மூலம் இந்தியா, எகிப்தின் சுதந்திரம்—அந்தஸ்து பற்றிய உரிமைகளுக்கு எந்தவித ஊறும் நேருவதற்கு இடமளிக்கவில்லை என்பதையும் தெளிவாக்கியிருக்கிறது" என்பதாகவும் நேரு குறிப்பிட்டுள்ளார்.

★

பொதுச்செயலாளர்

# இரா. நெடுஞ்செழியன்

அவர்களுக்கு

## குடந்தை நகர சபை

வரவேற்பு

12—8—56ல் குடந்தைக்கு வரும் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு குடந்தை நகரசபை, அன்று மாலை 4-30 மணிக்கு நகரசபை படேல் மண்டபத்தில் வரவேற்பளிப்பது என, 6—8—56ல் நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

# வலங்கைமானுக்கு அண்ணு வருகை

★

11—8—56 மாலை, வலங்கைமான் கழக உயர்நிலைப் பள்ளி சார்பில் நடைபெறும் சிறப்புக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் 'தமிழ் நேற்று—இன்று—நாளை' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

மாலை 6 மணிக்கு மேல் நடைபெறும் தி. மு. கழக 6-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் அண்ணு அவர்கள் விரிவுரையாற்றுவார்.

# இராமநாதபுர மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழகப்

## பொதுக்குழுக் கூட்டம்

12—8—56 மாலை 3 மணிக்கு, விருதுநகர் நாடார் பரிபாலன சங்கக் கட்டிடத்தில் கீழ்க்கண்டவற்றை ஆராய்வான் வேண்டி நமது மாவட்டக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது தாங்கள் தவருமல் கலந்துகோள்ள வேண்டுகிறேன்.

ஆய்வுக்கு வருவன: வரவு-செலவு ஒப்பேற்றல்; மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்; மாவட்ட மாநாடு நடத்துவது குறித்து; அருப்புக்கோட்டை நகர தி. மு. க.-வின் வேண்டுகோள் தீர்மானம்; உறுப்பினர் கோணர்வன,"

என்று இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகச்செயலாளர் இ. வ. ம. சௌந்திரபாண்டியன் அவர்கள் அறிவிக்கிருர்.

# பிரிட்டனின் வாழ்வு தாழ்வுப் பிரச்சினையாம்!

## நாசர் வெற்றி பெற்ருல் மேலை நாடுகள் எகிப்தின் தயவில்வாழ நேரிடுமாம்!

பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் ஓலம்— நாசரை 'பாசிஸ்டு' என வர்ணிக்கிருர்

இலண்டன் வானொலியில் பேசிய பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் மிகவும் படபடப்பாக பேசியிருக்கிருர்.

"சூயஸ் கால்வாயை எகிப்து தேசிய மயமாக்கியதால் எழுந்துள்ள நிலை இங்கிலாந்தின் வாழ்வு தாழ்வுப் பிரச்சினையாகும். முழுவதும் தேசிய நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட எகிப்தின் சுயநல நடவடிக்கைக்கு எதிராக இன்று உலகம் திரண்டிருக்கிறது,"

என்று அவர் ஆத்திரம் தொனிக்கக் குறிப்பிட்டிருக்கிருர்.

"கால்வாய் வழியாகக் கப்பல் போக்குவரத்து நடைபெறுவதைத் தடுக்கமாட்டோம் என்று உறுதிமொழி தந்துள்ள நாசரை ஏன் நம்பக்கூடாது?" என்று சிலர் கேட்கின்றனர்; இதற்கு விடை சுலபத்தில் கூறமுடியும். அவருடைய கடந்தகால நடவடிக்கைகளைப் பாருங்கள்.

"நமது சண்டை எல்லாம் எகிப்திற்கு எதிராகவோ, அராபிய உலகிற்கு எதிராகவோ அல்ல; மாருகக் கர்னல் நாசருக்கு எதிராகத்தான்.

"நாசரின் நடவடிக்கை பாசிச முறையைச் சேர்ந்ததாகும்; எனவே, அந்த முறையை நாம் எதிர்த்தாக வேண்டும். நாசர் வெற்றி பெற்றுவிட்டால், நம்மில் ஒவ்வொருவரும் அவருடைய தயவில் வாழவேண்டியவர்களாகிவிடுவோம். அதனை நாம் ஏற்கமுடியாது.

"கால்வாய்க்கு ஒரு சர்வதேச நிர்வாகமுறை வேண்டும்; இன்றேல், வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பெரும் நாடுகள் எகிப்தின் தயவில் வாழ நேரிடும்,"

என்று வார்த்தைகளைக் கொட்டியிருக்கிருர், ஈடன்!

இலண்டன் மாநாட்டில் கலந்துகொள்ள இதுவரையில் 19 நாடுகள் ஒப்பியிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிருர்.

★

அமைதியான வழியிலேயே

## சிக்கலுக்கு பரிகாரமாம்

"சூயஸ் பற்றிய சிக்கலுக்கு அமைதியான வழிகளிலேயே பரிகாரம் தேடுவதே பிரிட்டனின் நோக்கம்" என்று, பிரிட்டிஷ் வெளிவிவகார இலாகா அதிகாரி ஒருவர் கூறியிருக்கிருர்.

வாஷிங்டனில் பத்திரிகையாளரிடம் பேசிய ஜனதிபதி ஐசனேவரும், 'சூயஸ் சிக்கலுக்கு அமைதி வழியே பரிகாரம் தேடப்படும்' எனத் தான் நம்புவதாகத் தெரிவித்திருக்கிருராம்.

பெத்துநாய்க்கன்பேட்டையில்

## மாபெரும் கூட்டம்

11—8—56 மாலை 5-30 மணிக்கு சென்னை-1, பெத்துநாய்க்கன்பேட்டை 8-வது வட்ட மக்கள் மன்றச் சார்பில், காசி விசுவநாதர் கோயில் திடலில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தோழர் டி. கே. விசுவநாதன் தலைமை தாங்குவார்.

தோழர்கள் மு. கருணநிதி, டி. கே. சீனிவாசன், சி. ஆர். பாலசுந்தரம் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றுவர்.

# கழகக் கூட்டம்

★

வலங்கைமான்:

சேணியத் தெரு

11—8—56 மாலை 6 மணிக்கு

தி. மு. கழக 6-வது ஆண்டு விழா

தலைவர் :

கே. கே. நீலமேகம்

பேசுவோர்:

அண்ணு

அ. பொனம்பலனர்

குறிப்பு: மாபெரும் ஊர்வலம் நடைபெறும். மன்னார்குடி திரு சுந்தரேசன் இன்னிசை வழங்குவார்.

★

ஆலங்கோட்டை :

அம்பான்கோயிலுக்கு எதிரில்

11-8-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர் :

ப. நாராயணசாமி

பேசுபவர் :

இரா. நெடுஞ்செழியன்

★

ஆவதம்புதுப்பேட்டை :

முஸ்லீம் பாடசாலை எதிரில்

10—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

சி. எஸ். புண்யகோட்டி

பேசுவோர் :

ஏ. எல். சி. கிருட்ணசாமி

எம். கே. ரகமதுல்லா

★

மூகவூர் :

போன் விழா மைதானம்

11—8—56 இரவு 7 மணிக்கு

தலைவர் :

ஏ. சுப்பையா

பேசுவோர் :

ஈ. வே. கி. சம்பத்

எஸ். முத்து

# பதுக்கப்பட்ட உணவு பொருள்

ரூ. 10 கோடி பெறுமானது வெளிவந்ததாம்

மத்திய மந்திரி தகவல்

புதுடில்லி, ஆக. 6—

"உணவுப் பொருள் பதுக்கப்படுவதைத் தடுப்பதற்காக ரிசர்வ் பாங்கி மேற்கொண்ட நடவடிக்கையின் விளைவாக ஏறத்தாழ ரூ. 10 கோடி பெறுமான உணவுத் தானியம் வெளிப்பட்டது;"

என்று, உணவு மந்திரி ஜெயின் மக்கள் சபையில் கூறியிருக்கிருர்.

## இருமொழி பம்பாய்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பின்னர் இரவு ஒரு பெருங்கூட்டம் அகமதாபாத் நகர மின்சார விநியோக அலுவலகத்தை முற்றுகையிட்டுத் தாக்க முனைந்தபோது அந்தக் கூட்டத்தைக் கலைப்பதற்கும் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரியவருகிறது.

இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு நகர நீதிபதி, நகரில் இரவு ஒன்பது மணி முதல் மறுநாள் காலை 7 மணி வரை ஊரடங்குச் சட்டத்தை பிரகடனப்படுத்தியிருக்கிருர்.

மேலும், ஏழு நாட்களுக்கு ஊர்வலங்கள், கூட்டங்கள் ஏதும் நடைபெறக் கூடாதெனவும் அவர் 144 தடைச் சட்டத்தையும் பிரகடனம் செய்துள்ளார்.

மொத்தத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் மாணவர்கள்தான் பெரும் பங்கு ஏற்றிருக்கின்றனர் என்றும், போலீசார் மூன்று முறைகளிலும் சுமார் 100 ரவுண்டுகள் வரை சுட்டனர் என்றும், இருமொழி மாநில அமைப்பிற்கு எதிராக இத்தனை பெரிய ஆர்ப்பாட்டங்கள் எதிர்பார்க்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

வாஷிங்டன், ஆக. 8—

405 இலட்சம் டாலர் செலவில் தனிப்பட்டவர்களால் அமைக்கப்படவிருப்பதும் 1,00,000 கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தி செய்யக்கூடியதுமான ஒரு அணு மின்சார உற்பத்தி நிலையைக் கட்டுவதற்கு அணுசக்திக் குழு, நிபந்தனையுடன் அனுமதியளித்துள்ளது.

# 12 காங்கிரஸ் தியாகிகள் கைது

சட்டசபைமுன் ஆர்ப்பாட்டம் செய்யப் புறப்பட்டனராம்

சென்னை, ஆக. 8—

காங்கிரஸ் அரசியல் தியாகிகள் 12 பேர் இன்று கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

சட்டசபைகளின் கூட்டுக் கூட்டத்தில் கவர்னர் இன்று பேச வருமுன்னர், சட்டசபை முன்பு ஆர்ப்பாட்டம் செய்வதற்காக இவர்கள் புறப்பட்டபோது கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தங்கள் குறைகளை சர்க்காரும் கவர்னரும் கவனிக்க வேண்டுமென்பதற்காகவே இந்த ஆர்ப்பாட்டத் திட்டத்தில் இறங்கியதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

## தியாகிகளுக்குப் 'பென்ஷன்'

சென்னை, ஆக. 8—

அரசியல் தியாகிகளுக்கு மாதம் ரூ. 40 வீதம் பென்ஷன் தருவதற்கான மசோதா ஒன்றினை தாம் சட்டசபையில் கொண்டுவரப் போவதாக, பஞ்சாட்சரம் (செட்டியார்) என்ற எம். எல். ஏ. தெரிவிக்கிருர்.

# சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

ஆக. 10 : வேலூர் — (சேலம்)
11 : ஆய்யம்பாளையம்
12 : வாணியம்பாடி — (வ. ஆ. மாவட்ட நிர்வாகக்குழுக் கூட்டம்)
15 : சென்னை
17 : தில்லைவிளாகம்
19 : திருவில்லிபுத்தூர்
23 : சென்னை — (பழைய மாம்பலம்)
24 : சென்னை (ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம்)
26 : சென்னை : காலை — திருமணம்; மாலை — பொதுக் கூட்டம்
30, 31 : தேவபாண்டலம் பகுதிகள்

## சொற்பயிற்சிக் கூட்டம்

10—8—56 மாலை 6 மணிக்கு சென்னை—11-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், கழகப் பணிமனையில் (4/38 ஏ., பிராட் வே, சென்னை—1) தோழர் ந. தமிழ்தாசன் தலைமையில், 'நாடும் ஏடும்' எனும் தலைப்பில், கழகத் தோழர்கள் பேசுவர்.

## காரைக்குடி வள்ளுவர் படிப்பக ஆண்டு விழா

11—8—56 மாலை 6 மணியளவில், காரைக்குடி 10-வது வார்டு வள்ளுவர் படிப்பக முதலாம் ஆண்டு விழா ப. துரைக்கண்ணு முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெறும். டாக்டர் மா. இராசமாணிக்கனர், திரு. எஸ். குழந்தைநாதன், தோழியர் ந. சரோசினி தேவி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றுவர்.

## பர்மாவுக்கு திரு-கொச்சி இருல்மீன் ஏற்றுமதி

தற்போலதய நிலைமை பற்றி மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, ஆக. 8—

"இந்தியாவிலிருந்து 14,000 மூட்டை இருல் மீனை' இறக்குமதி செய்வதற்காகப், பர்மிய சர்க்கார் சமீபத்தில் 'டெண்டர்'களைக் கோரியிருப்பதாகத் தெரியவருகிறது" என்று மத்திய வர்த்தக மந்திரி மக்கள் சபையில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்

இந்தியாவிலிருந்து பர்மாவுக்கும் பலவகையான மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகவும் ஆனல், 1954-55-ம் ஆண்டில் ரூ. 1,38,00,000-த்திற்கு செய்யப்பெற்ற ஏற்றுமதியானது 1955—56-ம் ஆண்டில் 57 இலட்சம் ரூபாயாகக் குறைந்துவிட்டதென்றும் மந்திரி தெரிவித்தார்.

## உயர்தர பட்டு தயாரிக்க மத்திய சர்க்கார் நிதி உதவி

புதுடில்லி, ஆக. 8—

உயர்தரமான பட்டு தயாரிப்பதற்காக மாநில சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் நிதி உதவி அளித்துள்ளது.

ஓசூர் பட்டுப்பண்ணையில் முசுக்கட்டை இலைகள் கெட்டுப்போகாமல் பாதுகாப்பதற்கான நவீன முறைகளைக் கையாளுவதற்கு ரூ. 4000 அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இந்த பண்ணைதான் மிகப் பெரியதெனக் கூறப்படுகிறது. ஆண்டுதோறும் இங்கு 3-இலட்சம் இராத்தல் முசுக்கட்டை இலை உற்பத்தி செய்யப்படுகிறது.

## 2,000 ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்!

அழகப்பாநகர் (தி.கொ), ஆக. 7—

அழகப்பா பஞ்சாலையைச் சேர்ந்த சுமார் 2,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர் என்று தெரியவருகிறது.

அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் முறிந்ததின் விளைவாகவே அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது.

1955-ம் ஆண்டிற்கு 4 மாத போனஸ் தரவேண்டும் என்றும், 'கிராக்கிப் படி'யை 25 சதவிகிதம் உயர்த்த வேண்டும் என்றும் தொழிலாளர்கள் கோரியிருந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.